# LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : March 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & O wner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

2021- 16796675765







Lords ம பால்ராஜ்
Founder | International President




LORDS
CLUBS INTERNATIONAL
Govt. Reg. No.:1359/2013
INTERNATIONAL SOCIAL SERVICES



BIBLE 14




KURAN 14




BHAGAVAD GITA 14

www.lordsclubs.com



LORDS CLUBS INTERNATIONAL

# தலையங்கம்...

நீ கருவரைக்கு செல்லும் போது மட்டும் யார் கண்களுக்கும் தெரியாத அணுக்களாய் இரு!

நீ கருவறையை விட்டு வெளியில் செல்லும்போது மட்டும் உனது கண்கள் கலங்கி அழும் குழந்தைகளாய் இரு!

நீ பள்ளிகல்லூரிகளுக்கு செல்லும் போது மட்டும் மாண்புமிகு மாணவர்களாய் இரு!

நீ வேலைக்கு செல்லும்போது மட்டும் தொழிலாளிகளாய் இரு!

நீ பூமியில் அனைத்து நாடுகளிலும் உயிர் வாழும் போது ஒற்றுமையாய் மனிதநேய மிக்க மனிதர்களாய் இரு!

நீ பூமியில் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களாகி பிற உயிரினங்களுக்கு உதவி செய்யும்போது கடவுள்களாய் இரு!

நீ இந்து கோவில்களுக்குள் செல்லும்போது மட்டும் இந்துக்களாய் இரு!

நீ கிருஸ்தவ தேவாலயங்களுக்கு செல்லும்போது மட்டும் கிறிஸ்தவர்களாய் இரு!

நீ இஸ்லாமிய மசூதிக்குகளுக்குள் செல்லும்போது மட்டும் இஸ்லாமியர்களாய் இரு!

நீ இறுதியாய் இறுதிப் பயணம் செல்லும்போது மட்டும் உன்னை சார்ந்தவர்களின் கண்களை கலங்க வைக்கும் அமைதியான பிணமாய் இரு!

நீ பின்னர் புதைக்கப்பட்டார் எலும்புகளாய் இரு!

நீ எரிக்கப்பட்டால் மீண்டும் அணுக்களை போன்று யார் கண்களுக்கும் தெரியாது சாம்பல் துகள்களாய் இரு!

ஆகவே அனைத்து உயிரினங்களும் அணுக்களாக தோன்றி அணுக்களாகவே மறையும் நிரந்தரமற்ற சில காலங்கள் மட்டுமே பூமியில் உயிர் வாழும் தற்காலிக உயிரினங்கள் தான் என்ற உண்மையை இந்த பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் நன்கு உணர வேண்டும்.

லார்ட்ஸ் ம பால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்
PART-14




## தொடக்கநூல் அதிகாரம் – 31 – திருவிவிலியம்

### யாக்கோபு லாபானிடமிருந்து தப்பியோடல்

1 லாபானின் புதல்வர், "நம் தந்தைக்குரிய யாவற்றையும் யாக்கோபு கைப்பற்றி அவருடைய சொத்தைக்கொண்டே, இந்தச் செல்வத்தை எல்லாம் சேர்த்துக்கொண்டான்" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டதை யாக்கோபு கேட்டார்.

2 லாபானின் மனமும் முன்புபோல் இல்லை என்று யாக்கோபு கண்டார்.

3 ஆண்டவர் யாக்கோபை நோக்கி, "உன் மூதாதையரின் நாட்டிற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் திரும்பிப்போ; நான் உன்னோடு இருப்பேன்" என்றார்.

4 எனவே, யாக்கோபு ராகேலையும் லேயாவையும் தம் மந்தை இருந்த புல்வெளிக்கு வரும்படி ஆளனுப்பினார்.

5 பிறகு அவர் அவர்களை நோக்கி, "உங்கள் தந்தையின் மனம் என்பால் முன்பு போல் இல்லை என்று காண்கிறேன். என் தந்தையின் கடவுளோ என்னோடு இருந்து வருகிறார்.

6 உங்கள் தந்தைக்காக முழு வலிமையுடன் உழைத்தேன் என்று உங்களுக்குத் தெரியும்.

7 உங்கள் தந்தையோ என்னை ஏமாற்றி, என் கூலியைப் பத்து முறை மாற்றினார். அவர் வழியாக எனக்கு எவ்விதத்தீங்கும் நேரிடக் கடவுள் விடவில்லை

8 ஏனெனில், 'கலப்பு நிறமானவை உனக்குரிய ஊதியம்' என்றபோது, ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளையே ஈன்று வந்தன. 'வரியுள்ளவை உனக்குரிய ஊதியம்' என்றபோதோ ஆடுகளெல்லாம் வரியுடைய குட்டிகளையே ஈன்றன.

9 இவ்விதமாய்க் கடவுளே உங்கள் தந்தையின் மந்தைகளை எடுத்து எனக்குத் தந்தருளினார்.

10 ஆடுகள் சினையுறும் காலத்தில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் நான் கண்களை உயர்த்திப் பார்த்தபோது, ஆடுகளோடு பொலியும் கிடாய்கள் வரியும், கலப்பு நிறமும், புள்ளியும் உடையனவாய் இருந்தன.

11 அக்கனவில் கடவுளுடைய தூதர், 'யாக்கோபு!' என்று என்னை அழைக்க, நான், 'இதோ! அடியேன்' என்றேன்.

# BIBLE




12 அவர், 'உன் கண்களை உயர்த்திக் கிடாய்கள் யாவும் வரியும் கலப்புநிறமும் புள்ளியும் உடைய ஆடுகளுடன் பொலிவதைப் பார். ஏனெனில், லாபான் உனக்குச் செய்தது அனைத்தையும் நான் கண்டேன்.

13 நீ கல்லைத் திருப்பொழிவு செய்து, எனக்கு நேர்ச்சை செய்து கொண்ட இடமாகிய பெத்தேலின் இறைவன் நானே. நீ உடனே எழுந்து இந்த நாட்டை விட்டுப் புறப்பட்டு உன் பிறந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்' என்று கூறினார்" என்றார்.

14 அதற்கு ராகேலும், லேயாவும், "எங்கள் தந்தையின் குடும்பத்தில் எங்களுக்குப் பங்கும் உரிமைச் சொத்தும் இன்னும் உண்டோ?

15 அவர் எங்களை அந்நியப் பெண்களைப் போல் விலைக்கு விற்று, எங்களுக்காக வாங்கியதையும் முழுமையாக விழுங்கிவிடவில்லையா?

16 ஆனால், செல்வத்தையெல்லாம் எங்கள் தந்தையிடமிருந்து கடவுள் பிடுங்கி, நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் உரிமையாக்கினார். ஆகையால், கடவுள் உங்களுக்குச் சொன்னதையெல்லாம் செய்யுங்கள்" என்றனர்.

17 அப்போது யாக்கோபு, தம் மக்களையும், மனைவியரையும் ஒட்டகங்களின் மேல் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

18 பதான் அராமில் ஈட்டிய செல்வம் அனைத்தையும் திரட்டிக்கொண்டு, மந்தைகள் எல்லாவற்றையும் ஓட்டிக்கொண்டு, கானான் நாட்டிலிருந்த தம் தந்தை ஈசாக்கை நோக்கிப் பயணமானார்.

19 லாபான் ஆடுகளுக்கு உரோமம் கத்தரிக்கப் போயிருந்தபொழுது, ராகேல் தம் தந்தையின் குலதெய்வச் சிலைகளைத் திருடிக் கொண்டுவிட்டார்.

20 மேலும், யாக்கோபு, தாம் ஓடிப்போகிற செய்தியை அரமேயனான லாபானுக்குத் தெரிவிக்காமல் ஏமாற்றிவிட்டார்.

21 அவர் தமக்குச் சொந்தமான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நதியைக் கடந்து கிலயாது மலைநாட்டை நோக்கித் தப்பியோடினார்.

### லாபான் யாக்கோபைத் துரத்திப் பிடித்தல்

22 யாக்கோபு தப்பியோடிய செய்தி லாபானுக்கு மூன்றாம் நாள் தெரிவிக்கப்பட்டது.

# BIBLE




23 உடனே அவன் தன் உறவினர்களைக் கூட்டிக்கொண்டு, ஏழு நாள்களாக அவரைப் பின்தொடர்ந்து சென்று, அவர் இருந்த கிலயாது மலைப்பகுதியை நெருங்கினான்.

24 அன்றிரவு கனவில் அரமேயனான லாபானுக்குக் கடவுள் தோன்றி அவனை நோக்கி, "நீ யாக்கோபிடம் நல்லதோ கெட்டதோ யாதொன்றும் பேச வேண்டாம்" என எச்சரித்தார்.

25 லாபான் யாக்கோபை நெருங்கியபொழுது, யாக்கோபு கிலயாது மலைப்பகுதியில் கூடாரம் அடித்திருந்தார். அம்மலைப் பகுதியில் லாபானும் அவன் உறவினரும் கூடாரமடித்துத் தங்கினர்.

26 அவன் யாக்கோபை நோக்கி: "நீர் இப்படிச் செய்யலாமா? என்னை ஏமாற்றி என் புதல்வியரை வாள் முனையில் பிடித்த கைதிகளைப் போல் இட்டுச் செல்லலாமா?

27 எனக்கு ஒன்றும் தெரிவிக்காமல் என்னை ஏமாற்றிவிட்டு, ஏன் இரகசியமாய் ஓடி வந்தீர்? நான் மேளதாள வாத்தியங்களுடன் மகிழ்ச்சியாய் உங்களை வழியனுப்பி வைத்திருப்பேனே!

28 என் பேரப்பிள்ளைகளையும் புதல்வியரையும் நான் முத்தமிட விடாமல் செய்துவிட்டது ஏன்? நீர் முட்டாள்தனமாக நடந்து கொண்டீர்.

29 இப்போதோ, உமக்குத் தீங்கிழைக்க என்னால் முடியும். ஆனால், நேற்றிரவு உம் தந்தையின் கடவுள் என்னை நோக்கி, "நீ யாக்கோபிடம் நல்லதோ கெட்டதோ யாதொன்றும் பேச வேண்டாம்" என்று எச்சரித்தார்.

30 உம் தந்தையின் வீட்டுக்குத் திரும்பும் ஆவலினால் நீர் இவ்வாறு வந்துவிட்டீர். ஆனால், என் குலதெய்வச் சிலைகளைத் திருடிக்கொண்டது ஏன்?" என்றான்.

31 யாக்கோபு அவனுக்கு மறுமொழியாக, "நீர் உம் புதல்வியரை வன்முறையில் என்னிடமிருந்து பிரித்து வைத்துக்கொள்வீர் என்று அஞ்சினேன்.

32 ஆனால், உம் குலதெய்வச் சிலைகளை யாரேனும் திருடியிருந்தால், அவன் உயிரோடு இருக்க வேண்டாம். உம்முடைய பொருள் ஏதாவது இங்கே என்னிடம் இருக்கின்றதா என்று நம் உறவினர் முன்னிலையில் பரிசோதித்துப் பார்த்து எடுத்துக் கொள்ளும்" என்றார். அவற்றை ராகேல் திருடியிருந்தது யாக்கோபுக்குத் தெரியாது.

# BIBLE




33 அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும், லேயாவின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் நுழைந்து தேடிப்பார்த்தும் ஒன்றையும் கண்டு பிடிக்கவில்லை. பின் அவன் லேயாவின் கூடாரத்தைவிட்டு வெளியே வந்து, ராகேலின் கூடாரத்திற்குள் நுழைந்தான்.

34 இதற்கிடையே ராகேல் குலதெய்வச் சிலைகளை எடுத்துத் தம் ஒட்டகச் சேணத்தினுள் ஒளித்துவைத்து, அதன் மேல் உட்கார்ந்துகொண்டார். லாபான் கூடாரமெங்கும் சோதித்துப் பார்த்தும் ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை.

35 அவர் தன் தந்தையை நோக்கி, “என் தலைவராகிய உம் முன்னிலையில் என்னால் நிற்க முடியவில்லை என்று சினம்கொள்ள வேண்டாம். ஏனெனில், நான் மாதவிலக்காய் இருக்கிறேன்” என்றார். எனவே, அவன் எவ்வளவு தேடிப்பார்த்தும் குலதெய்வச் சிலைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

36 அப்பொழுது யாக்கோபு சினமுற்று லாபானுடன் வாதிட்டு மறுமொழியாகக் கூறியது: “நான் செய்த குற்றம் என்ன? நான் செய்த பாவம் என்ன? ஏன் இப்படி என்னைத் துரத்திக்கொண்டு வருகிறீர்?

37 என் உடைமைகளெல்லாம் சோதித்துப் பார்த்தீரே; உம் வீட்டுப் பொருளில் ஏதேனும் கண்டுபிடித்தீரா? அப்படியானால், அதை என் உறவினர், உம் உறவினர் முன்னிலையில் இங்கே வையும். இவர்களே உமக்கும் எனக்கும் இடையே தீர்ப்பு வழங்கட்டும்

38 இதற்காகத்தானா நான் உம்மோடு இருபது ஆண்டுகளாக இருந்தேன்? உம்முடைய செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் சினை அழியவில்லையே! உம்முடைய மந்தைக்கிடாய்களில் ஒன்றையும் நான் தின்னவில்லையே!

39 கொடிய விலங்குகளால் அடிபட்டவைகளை நான் உம்மிடம் கொண்டுவரவில்லையே; மாறாக அவற்றிற்கும் ஈடு செய்தேன். ஆனால், இரவிலோ பகலிலோ களவுபோனவற்றிற்காக நீர் என் கையிலிருந்து ஈடு வாங்கிக்கொண்டீரே!

40 பகலில் கொடும் வெயிலும் இரவில் கடும் குளிரும் என்னை வாட்டின, அதனால் என் கண்களுக்கு உறக்கமே இல்லை.

41 இவ்விதமாய் நான் உமது வீட்டில் உம் புதல்வியருக்காகப் பதினான்கு ஆண்டுகளும் உம் மந்தைகளுக்காக ஆறு ஆண்டுகளுமாக இந்த இருபதாண்டுகள் உம்மிடம் வேலை செய்தேன். நீரோ என் ஊதியத்தைப் பத்துமுறை மாற்றினீர்.

# BIBLE



42 ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் அச்சமுமான என் தந்தையின் கடவுள் என்னோடு இருந்திராவிடில் உண்மையாகவே நீர் என்னை வெறுங்கையனாய் அனுப்பியிருப்பீர். ஆனால், கடவுள் என் துன்பத்தையும் கடின உழைப்பையும் கண்டு நேற்றிரவு உம்மை எச்சரித்திருக்கிறார்" என்றார்.

**யாக்கோபு-லாபான் உடன்படிக்கை**

43 அதற்கு மறுமொழியாக லாபான் யாக்கோபை நோக்கி, "இப்புதல்வியர் என் புதல்வியர்; இப்பிள்ளைகள் என் பிள்ளைகள். இம் மந்தை என் மந்தை. நீர் காண்பவை யாவும் என்னுடையவையே. இப்படியிருக்க, என் புதல்வியர்க்கோ அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கோ நான் இன்று என்ன செய்துவிடப்போகிறேன்?

44 வாரும்; நானும் நீரும் இப்பொழுது உடன்படிக்கை செய்துகொள்வோம். அது உமக்கும் எனக்குமிடையே சான்றாக இருக்கட்டும்" என்றான்.

45 எனவே, யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, நினைவுத்தூணாக நிறுத்தினார்.

46 யாக்கோபு தம் உறவினரை நோக்கி, "கற்கள் சேகரித்துக்கொண்டு வாருங்கள்" என்றார். அவர்களும் கற்களைக் கொண்டு வந்து ஒரு குவியல் எழுப்பி, அக்குவியல் அருகே உணவருந்தினர்.

47 அதற்கு லாபான் 'எகர்சகதுத்தா'[8] என்றும் யாக்கோபு 'கலயேது'[9] என்றும் பெயரிட்டனர்.


48 பின்னர், லாபான், "இக்குவியல் இன்று உமக்கும் எனக்கும் சான்றாகுக" என்றான். ஆகவே, அதற்கு அவன் 'கலயேது' என்று பெயரிட்டான்.

49 மீண்டும் அவன், "நாம் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரிந்து சென்ற பின்னும் ஆண்டவரே நம்மைக் கண் காணிப்பாராக!" என்று சொல்லி அதற்கு 'மிஸ்பா'[10] என்றும் பெயரிட்டான்.

50 மேலும், அவன், "நீர் என் புதல்வியரைத் துன்புறுத்தினாலோ, அவர்களைத் தவிர வேறு பெண்களை மணந்து கொண்டாலோ, நம்மிடையே வேறு எவரும் இல்லையெனினும், உமக்கும் எனக்குமிடையே கடவுளே சாட்சி என்பதை நினைவில்கொள்ளும்" என்றான்.

51 மீண்டும் லாபான் யாக்கோபை நோக்கி, "இதோ இந்தக் குவியலையும் நினைவுத் தூணையும் பாரும். இவற்றை எனக்கும் உமக்கும் இடையே நிறுத்தி வைத்துள்ளேன்.

# BIBLE




52 நான் இந்தக் குவியலைக் கடந்து வந்து உமக்குத் தீங்கிழைக்கமாட்டேன் என்பதற்கும் நீர் இந்தக் குவியலையும் நினைவுத் தூணையும் கடந்து வந்து எனக்குத் தீங்கிழைக்க மாட்டீர் என்பதற்கும் இந்தக் குவியல் சான்று; இந்த நினைவுத் தூண் சான்று.

53 ஆபிரகாமின் கடவுள், நாகோரின் கடவுள், அவர்களின் தந்தையின் கடவுள், நம்மிடையே நீதி வழங்குவாராக" என்றான். பின்னர், யாக்கோபு ஈசாக்கின் அச்சம் என்ற தம் தந்தையின் கடவுள் பெயரால் ஆணையிட்டு வாக்களித்தார்.


54 பின்பு, அவர் மலையின் மேல் பலி செலுத்தி உணவு அருந்தும்படி தம் உறவினரை அழைத்தார். அவர்கள் உணவருந்திய பின் அன்றிரவு மலையிலேயே தங்கினார்கள்.

### யாக்கோபு ஏசாவைச் சந்திக்கத் தயார்செய்தல்

55 அதிகாலையில் லாபான் எழுந்து, தன் பேரப்பிள்ளைகளையும் புதல்வியரையும் முத்தமிட்டு அவர்களுக்கு ஆசி வழங்கினான். பின்னர், அவன் அவர்களை விட்டுப்பிரிந்து தன் இடத்திற்குத் திரும்பிப் போனான்.




www.lordsclubs.com lordsclubsinternational@gmail.com +91 9840559673





2:228 وَلَا يَحِلُّ لَهُنَّ اَنْ يَّكْتُمْنَ مَا خَلَقَ اللّٰهُ فِىْٓ نَ ثَلٰثَةَ قُرُوْٓءٍوَالْمُطَلَّقٰتُ يَتَرَ بَّصْنَ بِاَنْفُسِهِ
وَبُعُوْلَتُهُنَّ اَحَقُّ بِرَدِّهِنَّ فِىْ ذٰ لِكَ اِنْ اَرَادُوْٓااَرْحَامِهِنَّ اِنْ كُنَّ يُؤْمِنَّ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ
وَاللّٰهُ عَزِيْزٌ وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ لُ الَّذِىْ عَلَيْهِنَّ بِالْمَعْرُوْفِ وَلَهُنَّ مِثْ اِصْلَاحًا
حَكِيْمٌ

2:228. தலாக் கூறப்பட்ட பெண்கள், தங்களுக்கு மூன்று மாதவிடாய்கள் ஆகும்வரை பொறுத்து இருக்க வேண்டும்; அல்லாஹ்வையும், இறுதி நாளையும் அவர்கள் நம்புவார்களாயின், தம் கர்ப்பக் கோளறைகளில், அல்லாஹ் படைத்திருப்பதை மறைத்தல் கூடாது. ஆனால் பெண்களின் கணவர்கள் (அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதன் மூலம்) இணக்கத்தை நாடினால், (அத்தவணைக்குள்) அவர்களை (மனைவியராக)த் திருப்பிக்கொள்ள அவர்களுக்கு அதிக உரிமையுண்டு, கணவர்களுக்குப் பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று, முறைப்படி அவர்கள்மீது பெண்களுக்கும் உரிமையுண்டு; ஆயினும் ஆண்களுக்கு அவர்கள்மீது ஒருபடி உயர்வுண்டு; மேலும் அல்லாஹ் வல்லமையும்; ஞானமும் மிக்கோனாக இருக்கின்றான்.

2:229 وَلَا يَحِلُّ لَكُمْ اَنْ تَاْخُذُوْا بِمَعْرُوْفٍ اَوْ تَسْرِيْحٌ بِاِحْسَانٍ فَاِمْسَاكٌ اَلطَّلَاقُ مَرَّتٰنِ
فَاِنْ خِفْتُمْ اَ لَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ فَلَا جُنَاحَ مِمَّآ اٰتَيْتُمُوْهُنَّ شَيْـًٔا اِلَّآ اَنْ يَّخَافَآ اَ لَّا يُقِيْمَا حُدُوْدَ اللّٰهِ
وَمَنْ يَّتَعَدَّ حُدُوْدَ اللّٰهِ فَاُولٰٓـئِكَ هُمُ الظّٰلِمُوْنَ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَعْتَدُوْهَا فِيْمَا افْتَدَتْ بِهٖ عَلَيْهِمَ


2:229. (இத்தகைய) தலாக் இரண்டு முறைகள் தாம் கூறலாம் - பின் (தவணைக்குள் முறைப்படி கணவன், மனைவியாகச் சேர்ந்து வாழலாம்; அல்லது நேர்மையான முறையில் பிரிந்து போக விட்டுவிடலாம்;; அவ்விருவரும் அல்லாஹ்வின்



வரம்புகளை நிலை நிறுத்த முடியாது என்று அஞ்சும் போது தவிர, நீங்கள் மனைவியருக்கு கொடுத்தவற்றிலிருந்து யாதொன்றையும் திருப்பி எடுத்துக் கொள்ளுதல் கூடாது - இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் வரம்புகளை அவர்களால் நிலை நிறுத்த முடியாது என்று அஞ்சினால், அவள் (கணவனுக்கு) ஏதேனும் ஈடாகக் கொடுத்து(ப் பிரிந்து) விடுவதில் குற்றமில்லை; இவை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள வரையறைகளாகும்; ஆகையால் அவற்றை மீறாதீர்கள்; எவர் அல்லாஹ்வின் வரையறைகளை மீறுகிறார்களோ, அவர்கள் அக்கிரமக்காரர்கள் ஆவார்கள்.

2:230 فَاِنْ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهٗ مِنْۢ بَعْدُ حَتّٰى تَنْكِحَ زَوْجًا غَيْرَهٗ ؕ فَاِنْ طَلَّقَهَا فَلَا جُنَاحَ عَلَيْهِمَاۤ اَنْ
يَّتَرَاجَعَاۤ اِنْ ظَنَّاۤ اَنْ يُّقِيْمَا حُدُوْدَ اللّٰهِ ؕ وَتِلْكَ حُدُوْدُ اللّٰهِ يُبَيِّنُهَا لِقَوْمٍ يَّعْلَمُوْنَ

2:230. மீட்ட முடியாதபடி - (அதாவது இரண்டு தடவை தலாக் சொன்ன பின்னர் மூன்றாம்) தலாக் சொல்லிவிட்டால் கணவன் அப்பெண்ணை மறுமணம் செய்து கொள்ள முடியாது; ஆனால் அவள் வேறு ஒருவனை மணந்து - அவனும் அவளை தலாக் சொன்னால், அதன் பின் (முதற்) கணவன் - மனைவி சேர்ந்து வாழ நாடினால் - அதன் மூலம் அல்லாஹ்வுடைய வரம்புகளை நிலைநிறுத்த முடியும் என்று எண்ணினால், அவர்கள் இருவரும் (மறுமணம் செய்து கொண்டு மணவாழ்வில்) மீள்வது குற்றமல்ல. இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும்; இவற்றை அல்லாஹ் புரிந்து





கொள்ளக்கூடிய மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறான்.

2:231 وَاِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَاَمْسِكُوْهُنَّ بِمَعْرُوْفٍ اَوْ سَرِّحُوْهُنَّ بِمَعْرُوْفٍ وَلَا
تُمْسِكُوْهُنَّ ضِرَارًا لِّتَعْتَدُوْا ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰ لِكَ فَقَدْ ظَلَمَ نَفْسَهٗ ؕ وَلَا تَتَّخِذُوْٓا اٰيٰتِ اللّٰهِ هُزُوًا
وَّاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ وَمَآ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ الْكِتٰبِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ بِهٖ ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا
اَنَّ اللّٰهَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ

2:231. (மீளக்கூடிய) தலாக் கூறித் தவணை-இத்தா-முடிவதற்குள் முறைப்படி அவர்களை(உங்களுடன்) நிறுத்திக் கொள்ளுங்கள்; அல்லது (இத்தாவின்) தவணை முடிந்ததும் முறைப்படி அவர்களை விடுவித்து விடுங்கள்; ஆனால் அவர்களை உங்களுடன் வைத்துக் கொண்டு அவர்களைத் துன்புறுத்தாதீர்கள்; அவர்களிடம் வரம்பு மீறி நடவாதீர்கள்; இவ்வாறு ஒருவர் நடந்து கொள்வாரானால், அவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கிறார்; எனவே, அல்லாஹ்வின் வசனங்களைக் கேலிக் கூத்தாக ஆக்கிவிடாதீர்கள்; அவன் உங்களுக்கு அளித்த அருள் கொடைகளையும், உங்கள் மீது இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் சிந்தித்துப் பாருங்கள். இவற்றைக் கொண்டு அவன் உங்களுக்கு நற்போதனை செய்கிறான்; அல்லாஹ்வை அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிபவனாக இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

2:232 وَاِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوْهُنَّ اَنْ يَّنْكِحْنَ اَزْوَاجَهُنَّ اِذَا تَرَاضَوْا بَيْنَهُمْ
بِالْمَعْرُوْفِ ؕ ذٰ لِكَ يُوْعَظُ بِهٖ مَنْ كَانَ مِنْكُمْ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ ذٰ لِكُمْ اَزْكٰى لَـكُمْ وَاَطْهَرُ ؕ
وَاللّٰهُ يَعْلَمُ وَاَنْـتُمْ لَا تَعْلَمُوْنَ



2:232. இன்னும், பெண்களை நீங்கள் தலாக் செய்து, அவர்களும் தங்களுடைய இத்தா தவணையைப் பூர்த்தி செய்து விட்டால், அவர்கள் தாங்கள் விரும்பி ஏற்கும் கணவர்களை முறைப்படித் திருமணம் செய்து கொள்வதைத் தடுக்காதீர்கள்; உங்களில் யார் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்களோ, அவர்களுக்கு இதைக் கொண்டு உபதேசிக்கப்படுகிறது; இ(தன்படி நடப்ப)து உங்களுக்கு நற்பண்பும், தூய்மையும் ஆகும்; (இதன் நலன்களை) அல்லாஹ் அறிவான்; நீங்கள் அறிய மாட்டீர்கள்.


2:233 وَالْوَالِدٰتُ يُرْضِعْنَ اَوْلَادَهُنَّ حَوْلَيْنِ كَامِلَيْنِ لِمَنْ اَرَادَ اَنْ يُّتِمَّ الرَّضَاعَةَ ‌ؕ وَعَلَى
الْمَوْلُوْدِ لَهٗ رِزْقُهُنَّ وَكِسْوَتُهُنَّ بِالْمَعْرُوْفِ‌ؕ لَا تُكَلَّفُ نَفْسٌ اِلَّا وُسْعَهَا ‌ۚ لَا تُضَآرَّ وَالِدَةٌ ۢ بِوَلَدِهَا
وَلَا مَوْلُوْدٌ لَّهٗ بِوَلَدِهٖ وَعَلَى الْوَارِثِ مِثْلُ ذٰ لِكَ ۚ فَاِنْ اَرَادَا فِصَالًا عَنْ تَرَاضٍ مِّنْهُمَا وَتَشَاوُرٍ
فَلَا جُنَاحَ عَلَيْهِمَا ؕ وَاِنْ اَرَدْتُّمْ اَنْ تَسْتَرْضِعُوْٓا اَوْلَادَكُمْ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ اِذَا سَلَّمْتُمْ مَّآ اٰتَيْتُمْ
بِالْمَعْرُوْفِ‌ؕ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

2:233. (தலாக் சொல்லப்பட்ட மனைவியர், தம்) குழந்தைகளுக்குப் பூர்த்தியாகப் பாலூட்ட வேண்டுமென்று (தந்தை) விரும்பினால், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிரப்பமான இரண்டு ஆண்டுகள் பாலூட்டுதல் வேண்டும்; பாலூட்டும் தாய்மார்களுக்கு (ஷரீ அத்தின்) முறைப்படி உணவும், உடையும் கொடுத்து வருவது குழந்தையுடைய தகப்பன் மீது கடமையாகும்; எந்த ஓர் ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் (எதுவும் செய்ய) நிர்ப்பந்திக்கப்பட மாட்டாது தாயை அவளுடைய குழந்தையின் காரணமாகவோ. (அல்லது) தந்தையை

அவன் குழந்தையின் காரணமாகவோ துன்புறுத்தப்படமாட்டாது; (குழந்தையின் தந்தை இறந்து விட்டால்) அதைப் பரிபாலிப்பது வாரிசுகள் கடமையாகும்; இன்னும், (தாய் தந்தையர்) இருவரும் பரஸ்பரம் இணங்கி, ஆலோசித்துப் பாலூட்டலை நிறுத்த விரும்பினால், அது அவர்கள் இருவர் மீதும் குற்றமாகாது; தவிர ஒரு செவிலித்தாயைக் கொண்டு உங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்ட விரும்பினால் அதில் உங்களுக்கு ஒரு குற்றமுமில்லை; ஆனால், (அக்குழந்தையின் தாய்க்கு உங்களிடமிருந்து) சேரவேண்டியதை முறைப்படி செலுத்திவிட வேண்டும்; அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள் - நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை பார்ப்பவனாக இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

2:234 وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا يَّتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ اَرْبَعَةَ اَشْهُرٍ وَّعَشْرًا ۚ فَاِذَا
بَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا فَعَلْنَ فِىْٓ اَنْفُسِهِنَّ بِالْمَعْرُوْفِ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ

2:234. உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் அம்மனைவியர் நான்கு மாதம் பத்து நாள் பொறுத்திருக்க வேண்டும்; (இந்த இத்தத்)தவணை பூர்த்தியானதும், அவர்கள் (தங்கள் நாட்டத்துக்கு ஒப்ப) தங்கள் காரியத்தில் ஒழுங்கான முறையில் எதுவும் செய்துகொள்வதில் உங்கள் மீது குற்றமில்லை; அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிந்தவனாகவே இருக்கின்றான்.




عَلِمَ اللّٰهُ اَنَّكُمۡ جُنَاحَ عَلَيۡكُمۡ فِيۡمَا عَرَّضۡتُمۡ بِهٖ مِنۡ خِطۡبَةِ النِّسَآءِ اَوۡ اَكۡنَنۡتُمۡ فِىۡۤ اَنۡفُسِكُمۡ وَلَا 2:235
وۡا عُقۡدَةَ ؕ وَلَا تَعۡزِمُ ا سَتَذۡكُرُوۡنَهُنَّ وَلٰـكِنۡ لَّا تُوَاعِدُوۡهُنَّ سِرًّا اِلَّاۤ اَنۡ تَقُوۡلُوۡا قَوۡلًا مَّعۡرُوۡفًا
وَاعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ ؕ وَاعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ يَعۡلَمُ مَا فِىۡۤ اَنۡفُسِكُمۡ فَاحۡذَرُوۡهُ ۚ النِّكَاحِ حَتّٰى يَبۡلُغَ الۡكِتٰبُ اَجَلَهٗ
غَفُوۡرٌ حَلِيۡمٌ

2:235. (இவ்வாறு இத்தா இருக்கும்) பெண்ணுடன் திருமணம் செய்யக் கருதி (அது பற்றிக்) குறிப்பாக அறிவிப்பதிலோ, அல்லது மனதில் மறைவாக வைத்திருப்பதிலோ உங்கள் மீது குற்றமில்லை நீங்கள் அவர்களைப்பற்றி எண்ணுகிறீர்கள் என்பதை அல்லாஹ் அறிவான்; ஆனால் இரகசியமாக அவர்களிடம் (திருமணம் பற்றி) வாக்குறுதி செய்து கொள்ளாதீர்கள்; ஆனால் இது பற்றி வழக்கத்திற்கு ஒத்த (மார்க்கத்திற்கு உகந்த) சொல்லை நீங்கள் சொல்லலாம்; இன்னும் (இத்தாவின்) கெடு முடியும் வரை திருமண பந்தத்தைப் பற்றித் தீர்மானித்து விடாதீர்கள்; அல்லாஹ் உங்கள் உள்ளங்களிலுள்ளதை நிச்சயமாக அறிகின்றான் என்பதை நீங்கள் அறிந்து அவனுக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், பொறுமையாளனாகவும் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தொடரும்.....









किं कर्म किमकर्मेति
कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि
यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १६ ॥

'ஏது தொழில்; ஏது தொழிலல்லாதது' என்ற விஷயத்தில் ஞானிகளும் மயக்க மெய்துகிறார்கள். ஆகலால் உனக்குத் தொழிலியல்பை உணர்த்துகிறேன். இதை அறிவதனால் தீங்கி
னின்றும் விடுபடுவாய். 16

कर्मणो ह्यपि बोद्धव्यं
बोद्धव्यं च विकर्मणः ।
अकर्मणश्च बोद्धव्यं
गहना कर्मणो गतिः ॥ १७ ॥

தொழிலின் இயல்புந் தெரியவேண்டும்; தொழிற்கேட்டின் இயல்புந் தெரியவேண்டும்; தொழிலின்மையின் இயல்புந் தெரியவேண்டும்.
கர்மத்தின் நடை மிகவும் சூழ்ந்தது. 17







कर्मण्यकर्म यः पश्ये-
दकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान्मनुष्येषु
स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८ ॥

செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும் எவன் காணுகிறானோ, அவனே மனிதரில் அறிவுடையோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்திலிருப்பான். 18

यस्य सर्वे समारम्भाः
कामसङ्कल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं
तमाहुः पण्डितं बुधाः ॥ १९ ॥

எவனுடைய செய்கைத் தொடக்கங்களெல்லாம் விருப்ப நினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத்தீயால் எரிக்கப்பட்டனவாம்; அவனை ஞானிகள் அறிவுடையோனென்கிறார்கள். 19







त्यक्त्वा कर्मफलासङ्गं
नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभिप्रवृत्तोऽपि
नैव किञ्चित्करोति सः ॥ २० ॥

கர்மப் பயனிலே பற்றுக் களைந்தவனாய் எப்போதும் திருப்தி யுடையோனாய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்துகொண்
டிருக்கையிலும் செயலற்றவனாவான். 20

निराशीर्यतचित्तात्मा
त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म
कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ २१ ॥

ஆசை யற்றவனாய், சித்தத்தை ஆத்மாவால் கட்டுப்படுத்தி, எவ்வித தானங்களும் வாங்குவதைத் துறந்து, வெறுமே சரீரத் தொழில் மாத்திரம் செய்துகொண்டிருப்போன் பாவத்தை
யடையமாட்டான். 21







यदृच्छालाभसंतुष्टो
द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च
कृत्वापि न निबध्यते ॥ २२ ॥

தானாக வந்தெய்தும் லாபத்தில் ஸந்தோஷ
முறுவோனாகி, இருமைகளைக் கடந்து, பொறா
மை யற்றவனாய், வெற்றியிலும் தோல்வியிலும்
ஸம நிலை பெற்றோன் தொழில் செய்தாலும்
அதனால் கட்டுப்படுவதில்லை. 22

गतसङ्गस्य मुक्तस्य
ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म
समग्रं प्रविलीयते ॥ २३ ॥

பற்றுத லகன்றான், விடுதலை கொண்டான்,
ஞானத்தில் மதி நிலைக்கப் பெற்றான், வேள்வி
யெனக் கருதித் தொழில் புரிவான்—அவ
னுடைய கர்மமெல்லாம் தானே நழுவிப் போய்
விடுகிறது. 23







ब्रह्मार्पणं ब्रह्म हवि-
र्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं
ब्रह्मकर्मसमाधिना ॥ २४ ॥

பிரமத்துக்கு அர்ப்பணமாக பிரம அவியை பிரமத் தீயில் பிரமத்தால் ஹோமம் பண்ணுவோன், பிரமத்தின் செய்கையில் ஸமாதான மெய்தினோன், அவன் பிரமத்தை அடைவான். 24

दैवमेवापरे यज्ञं
योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं
यज्ञेनैवोपजुह्वति ॥ २५ ॥

சில யோகிகள் தேவருக்குச் செய்யப்படும் வேள்வியை வழிபடுகிறார்கள். வேறு சிலர் பிரமத் தீயில் வேள்வியையே ஆஹுதி செய்து வேட்கின்றனர். 25






श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये
संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य
इन्द्रियाग्निषु जुह्वति ॥ २६ ॥

வேறு சிலர் உட்கரணத்தை யடக்குதலாகிய ஸம்யமம் என்ற தீயில் செவி முதலிய இந்திரியங்களை ஆஹுதி செய்கிறார்கள். வேறு சிலர் இந்திரியங்களாகிய தழல்களில் ஒலி முதலிய விஷயங்களைச் சொரிகிறார்கள். 26

सर्वाणीन्द्रियकर्माणि
प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ
जुह्वति ज्ञानदीपिते ॥ २७ ॥

வேறு சிலர் ஞானத்தால் கொளுத்துண்ட தன்னாட்சி யென்ற யோகத் தீயில் எல்லா இந்திரியச் செயல்களையும் உயிர்ச் செயல்களையும் ஹோமம் பண்ணுகிறார்கள். 27

தொடரும்.....



Prime Minister Narendra Modi sends message to the BIMSTEC summit as it meets in in Colombo, Sri Lanka. Indian Foreign Minister S. Jaishankar is visiting Sri Lanka for the summit of Bay of Bengal Initiative countries. Modi calls for greater cooperation and free trade agreements to bring these countries together- Nepal, Sri Lanka, Myanmar, Thailand, India.

India's $1 billion credit line and about $2.5 billion in economic assistance comes at a critical time for Sri Lanka. Indian ties to Sri Lanka go back to the founding of the country with the landing of North Indian prince Vijaya in Tampabanni, cooper colored soil country. No other two nations have ties that go back so long in time to the Buddhist period in India when the Emperor Ashoka sent his son Mahinda with a branch of the Bodhi tree to Sri Lanka. India also provides a role ..





In addition to a new $1 billion credit line after the earlier $1 billion credit line, India is facilitating Sri Lanka's negotiations with the International Monetary Fund. Indian focus is for stronger Neighborhood and economic development in the region at an accelerated pace after earlier setbacks in the region. This can be seen in Uttar Pradesh a region as large in population as the US, which faltered for 60 years after independence, but is moving forward with both state ...

Prime minister Imran Khan of Pakistan loses support of key parties in parliament and his parliamentary majority in the National Assembly, A no-confidence motion is tabled in the National Assembly.





The Bay of Bengal Initiative for Multi Sectoral Security, Technical and Economic Cooperation is a big step forward in the Indian Ocean region. It offers the region a new opportunity to focus on rapid development after decades of faltering steps following independence. Challenges Mr. Modi described include, coastal shipping ecosystem, electricity grid interconnectivity, Master Plan for Transport Connectivity. Signing of the Charter provides the institutional architecture for BIMSTEC, sa ...

Japanese people have waited for a long time for this moment. A time to relax viewing the cherry blossom trees that are now in full bloom after two years of the pandemic.





We took a different way to help millions around the world build educated informed mindsets that affects and shapes their lives. For a future that is open, global and digital, with everyone having access to high quality information. We believe in the renewal of America, renewal of Europe, the renewal of India, the rest of Asia, Latin America and Africa. The renewal of our supply chains, health, education, infrastructure, as we rebuild our countries after the pandemic. Literacy and knowledge we believe cannot thrive and grow in a world of web bots, web crawlers, or AI. This requires human curiosity, human learning, and human imagination. We take as inspiration the saying- “One has to be free, and as broad as sky. One has to have a mind that is crystal clear, only then can truth shine in it.” Every contribution whether big or small is precious-

Advertisement






லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இயக்கமாக உருவாக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் அரசு பதிவு செய்யப்பட்ட ஒரு மாபெரும் சர்வதேச சமூக சேவை இயக்கம் ஆகும்.

இந்த இயக்கத்திற்கு அனைத்து நாடுகளிலிருந்தும் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.
இந்த இயக்கமானது உலகெங்கும் பல்வேறு கிளைகளாக ஒவ்வொரு கிளைகளுக்கும் 25 உறுப்பினர்களுக்கு மேற்பட்ட நபர்கள் இருந்து செயல்படுகின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் மூலம் உலக மக்கள் ஒற்றுமை வலுப்படுகிறது. இதில் முக்கிய சேவையாக அன்னதானம் வழங்குதல், ரத்த தானம் வழங்குதல், மரக்கன்றுகள் நடுதல், உலக மக்களுக்கு மனித நேயமும், சமூக சேவையும், ஆன்மீகம், கம்ப்யூட்டர் தொழிற்கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் முன்னேற்றம் மேலும் பல எண்ணற்ற நல்ல பல சேவைகளைச் செய்து வருகின்றோம்.

இந்த இயக்கத்திற்கு உறுப்பினராக இணைவதற்கு மிகவும் எளிய முறையில் +91 9840559673 என்ற வாட்ஸ்அப் எண் வழியாகவே சுலபமாக இணைந்து அனைவரும் பயன்பெறலாம்.
உறுப்பினர் சந்தா தொகை ரூபாய் 3000 மட்டுமே.
லார்ட்ஸ் உறுப்பினர்கள் செலுத்தும் ஆண்டு சந்தா இந்திய ரூபாய் 3000 மட்டுமே இத்தொகையை இந்தியாவில் உள்ளவர்கள்
Google Pay & Paytm Account : +91 9840559673 (Social Worker) என்ற வங்கி கணக்கிலும் அயல்நாடுகளில் உள்ளவர்கள்
International Money USD, EUR, GBP Online Transfer :
Payoneer Account : lionpaulraj@gmail.com என்ற வங்கி கணக்கிலும் செலுத்தி அத்துடன் உங்களின் முகவரி ஐ.டி ஒன்றும், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இமேஜ் ஒன்றும், இரத்த குரூப் என்ன என்பதனையும் டைப் செய்து அத்துடன் சந்தா பணம் அனுப்பப்பட்ட ஸ்கிரீன் ஷாட்டையும் +91 9840559673 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி உறுப்பினராகுங்கள்.

உறுப்பினராக இணைந்த லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களுக்கு ஆன்லைன் வழியாக சமூக சேவகர் என்ற இன்டர்நேஷனல் அடையாள அட்டை 24 மணி நேரத்திற்குள் வழங்கப்படும். நீங்களும் சர்வதேச சமூக சேவகர் ஆகலாம் என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


## LORDS CLUBS INTERNATIONAL

Govt. Reg. No. : 1359/2013

Ct. No. : +91 9840559673 | +91 9790855633

Website : www.lordsclubs.com

E-mail : lordsclubsinternational@gmail.com





















# LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359/2013

+91 9840559673
Website : www.lordsclubs.com
E-mail : lordsclubsinternational@gmail.com




Economic Development | Education Service | Friendship | Health Service | Human Rights | Leadership | Law Service | Social Service | Spirituality

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்கள் கவனத்திற்கு...

அன்பார்ந்த லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களே வணக்கம்.

இன்று முதல் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாமல் காலை 9 மணிமுதல் 10 மணிவரை அதாவது வாரத்தில் ஒரு மணி நேரம் மட்டும் நேரம் ஒதுக்கி உலகெங்கிலும் உள்ள நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் அனைத்து கிளைகளிலும் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கிளைகளில் அவரவர்கள் வசிக்கும் பகுதிகளில் ஐந்து உறுப்பினர்கள் இருந்தாலும் சரி 50 உறுப்பினர்கள் இருந்தாலும் சரி 500 உறுப்பினர்கள் இருந்தாலும் சரி கட்டாயமாக தவறாமல் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

அந்த சிறப்பு கூட்டத்தில் அந்தந்த பகுதி பொது மக்களுக்கான பொது சேவைகள் பற்றியும், நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் அனைத்து உறுப்பினர்கள் பொருளாதார முன்னேற்றம் பற்றியும், மற்றும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை யை பற்றியும் முதன்மை யில் வைத்து பின்னர் அக்கூட்டத்தில் மற்ற அனைத்து நல்ல விஷயங்களையும் பற்றியும் பேச வேண்டும்.

கூட்டத்திற்குள் கலந்து கொள்ளும் நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் தங்களின் இன்டர்நேஷனல் உறுப்பினர் அடையாள அட்டையை கட்டாயமாக அணிந்திருக்க வேண்டும்.

அந்தந்த கிளைகளுக்கும் தலைவர் பொருளாளர் செயலாளர் இருந்தால் அந்தந்த கிளைகளின் தலைவர்கள் நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் இன் அந்தந்த மாவட்ட ஆளுநர்களிடமும் துணை ஆளுநர்களிடம் தொடர்பு கொள்ள வேண்டும்.

நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் அனைத்து மாவட்ட ஆளுநர்களும் காலை 11 மணி முதல் 12 மணி வரை என்னிடம் நேரடியாக வீடியோ கான்பரன்ஸ் கால் வாயிலாக தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் அனைத்து பொதுக் கூட்டங்களும் நடக்கும் முழு வீடியோவையும் +91 9840559673 என்ற வாட்ஸ் அப்பிற்கு அல்லது E mail : lordsclubsinternational@gmail.com இமெயிலுக்கோ அனுப்பி வைக்க வேண்டியது அந்தந்த கிளைகளின் தலைவர்கள் பொறுப்பு ஆகும்.

தலைவர் பொருளாளர் செயலாளர் இல்லாத எண்ணிக்கையில் 25க்கும் குறைவாக உள்ள உறுப்பினர்களும் கட்டாயமாக பொதுக்கூட்டம் நடத்தப்படவேண்டும் அவர்களும் நடத்தப்பட்ட அந்த கூட்டத்தின் முழுவிவரத்தையும் வீடியோ படமெடுத்து +91 9840559673 என்ற வாட்ஸ் அப்பிற்கு அல்லது E-mail : lordsclubsinternational@gmail.com இமெயிலுக்கோ அக் கூட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையில் உள்ள வீடியோவை நிழற்படமாக எடுத்து முழுமையாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றேன்.

நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களுக்காக மட்டும் சுமார் நூற்றுக்கணக்கான தொழில்களும் மேலும் பல்வேறு ரியல் எஸ்டேட் தொழில்களும் மற்றும் பல நூற்றுக்கணக்கான வணிக உற்பத்தி பொருட்களும் நமது லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்கள் மூலமாகவே பல்வேறு ஏஜென்சி எடுக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றது.

அத்தனை ஏஜென்சிகள் மூலமாக அனைத்து உறுப்பினர்களும் பயன் பெற்று பொருளாதாரம் ஈட்ட வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அனைத்து பகுதியிலும் உள்ள லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் கிளைகளின் உறுப்பினர்களுக்கும் மீட்டிங் வைக்கப்பட்டு வருகின்றது ஒரு மணிநேரம் அந்த மீட்டிங் இல் தவறாமல் கலந்து கொண்டு அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கனம் உங்கள் உண்மையுள்ள,

M. பால் ராஜ், சர்வதேசத் தலைவர்
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
www.lordsclubs.com